Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -22 | 07-08-2003 | வியாழக்கிழமை | ஓசை 170


R:A:Nelson Yasarathne
T.P: 024 -23318
NELSON LEARNERS
(Government Approved "A" Grade Driving School)
Reg No :D.S.242
சிறிய வாகனம் முதல் பெரிய வாகனம் வரை பயிற்சிகொடுத்து லைசன்ஸ் கொடுக்கப்படும்.
கிளை: வவுனியா, யாழ்ப்பாணம். (தி.8246)
No:86, Bus Stand Complex Vavuniya.

# சமாதான யாத்திரைகள், கருத்தரங்குகள் என்ற ஏமாற்றுவேலைகள் எமக்கு வேண்டாம்!

## "சிறந்த சமாதானத்திற்கான தரிசன நோக்கு" குழுவிடம் யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ். மக்களின் உணர்வலைகளை பொங்குதமிழ் மூலம் முழு உலகுக்குமே பறைசாற்றியுள்ள போது சமாதான யாத்திரைகள், கருத்தரங்குகள் என்பனவற்றை நடத்திய இங்குள்ள மக்களின் உணர்வுகளைத் தென்பகுதி மக்களுக்கு உணர்த்துவது என்ற ஏமாற்று வேலைகள் இனிமேல் எமக்கு வேண்டாம் என்று சர்வதேச மாணவர் பேரவை மற்றும் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.**

நேற்றுக் காலை 11.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியல்பீட மண்டபத்தில் நடைபெற்ற இலங்கையின் "சிறந்த சமாதானத்திற்கான தரிசன நோக்கு" என்ற கருத்தரங்கை நடத்துவதற்காக தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த தேவநேசன் நேசையா இத்திட்டத்தின் இணைப்பாளர் இராஜசிங்க சேனநாயக்கா ஆகியோர் அடங்கிய ஏழுபேர் கொண்ட குழுவிற்கே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளனர். தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளின் கையில் கிடைக்கும் இடைக்கால நிர்வாகத்தின் ஊடாக தமிழ்மக்களுக்கு இயல்பு வாழ்வு கிடைக்கும் என்பது உலகமறிந்த உண்மை. இந்த நிலையில் சமாதான யாத்திரை என்ற பெயரில் தென்னிலங்கையிலிருந்து வரும் குழுக்கள் உயர்மட்ட அதிகாரிகளுடனும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## குரங்குப் பாஞ்சான் முகாம் குறித்து கண்காணிப்புக் குழுவின் காலக்கெடு நேற்றுடன் முடிந்தது

திருகோணமலைப் கிண்ணியாப் பகுதியில் அமைந்துள்ள குரங்கு பாஞ்சானில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் தொடர்பாக பதில் கூறுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு கண்காணிப்புக்குழுவினால் விதிக்கப்பட்டகாலக்கெடு நேற்றுடன் முடிவடைந்துள்ளது.இந்த முகாம் போர்நிறுத்த ஒப்பந் தங்களுக்குப் பின்னர் தமது

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பொற்பதி படைமுகாம் குறித்து இளம்பரிதி-கண்காணிப்புக்குழு பேச்சு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பொற்பதி மீன்பிடிக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய படைமுகாமை அகற்ற படையினர் தொடர்ந்தும் பின்னடித்து வருவதாக அப்பகுதி பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

அப்பகுதி பொது அமைப்புக்களின் எதிர்ப்பை அடுத்து முகாம் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்ட போதும் அமைக்கப்பட்ட காவலரண்கள் மற்றும் முகாங்களை மூட படையினர் மறுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சர்வதேச கண்காணிப்புக்குழு மனித உரிமைகள் ஆணைக் குழு என்பவற்றிற்கு முகாம் அமைக்கும் பணிகள் தொடர்பாக செய்யப்பட்ட புகார்களை மீளப்பெற்றுக் கொண்டால் மாத்திரதே இம் முகாமை அகற்ற முடியும் என புதிதாக அமைக்கப்பட்ட முகாமின் படை அதிகாரி அப்பகுதி பொதுமக்களை நிர்ப்பந்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்கொள்ளும் பிரச்சினை குறித்து திருமலை மீனவர் கண்காணிப்புக் குழுவிடம் மனு கையளிப்பு

(திருமலை)

திருகோணமலையில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விளக்கி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.கடற்பிரதேசத்தில் சுருக்கு வலை டைனமெற் வெடிப்பொருட்கள் மற்றும் அதிக ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல் போன்றவற்றால் கடல் வளம் பாதிக்கப்படுவதாகவும், கடற்றொழிலாளர்கள் பொருளாதாரப் பிரச்சினைக்கு உள்ளாவதாகவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைக் கண்டிக்கும் வகையில் ஏகாம்பரம்வீதி வீரநகர் பகுதியில் இருந்து புறப்பட்ட கடற்றொழிலாளர்கள் உள்துறைமுக வீதியை ஊர்வலமாகச் சென்றடைந்து மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் அரச திணைக்கள அதிகாரியிடமும் மனுக்களைக் கையளித்துள்ளனர்.

## முன்னாள் அரச அதிபரின் நிதிமோசடி விவகாரம் 17 காசோலைகளைப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்க நீதிமன்று வங்கிக்குப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் அரசஅதிபர் மோசடி செய்ததாகக் கூறப்படும் பலகோடி ரூபா பெறுமதியான 17காசோலைகளையும் உடனடியாக இலங்கைகுற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்குமாறு யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு யாழ்.நீதிமன்றம் கடும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள்அரச அதிபர் சண்முகநாதன் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணத்தின் புனர்வாழ்வுக்காக புனர்வாழ்வு அமைச்சால் ஒதுக்கப்பட்ட பலகோடி ரூபா பெறுமதியான காசோலைகளை மோசடி செய்து இவ்வங்கிக்கி 17 ளையில் வைப்புச் செய்துள்ளார் என்ற விடயம் அம்பலமானதைத் தொடர்ந்துதாக்கல் செய்யப்பட்ட வழக்குத்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கு மாகாணத்தில் "யுனிசெவ்" 10 செயற்திட்டங்களை செயற்படுத்த முடிவு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்துள்ள 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களை இடைத்தங்கல் முகாமில் ஒன்றிணைத்து புனர்வாழ்வளித்து பெற்றோரிடம் ஒப்படைப்பது உட்பட பத்து செயற் திட்டங்களை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 'யுனிசெவ்' செயற்படுத்தவுள்ளது.இத்திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் அனைத்து ஒத்தாசை மட்டுமல்ல இத்திட்டம் பற்றிய அறி வினை பொதுமக்கள் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என இலங்கைக்கான யுனிசெவ் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஆயித்தியமலையில் யுனிசெவ் உதவியுடன் தமிழர் புனர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நித்திரையில் பாம்பு தீண்டி ஒரு வயதுப் பாலகன் மரணம்

(அலுவலக செய்தியாளர்)

பாம்பு தீண்டியதன் விளைவாக ஒரு வயது பாலகன் பரிதாபமாக மரணமானார். மேற்படி சம்பவம் நேற்று ஆறாம் திகதி அதிகாலை கிளிநொச்சி உதயநகர் மேற்கு கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

நித்திரையில் இருந்தவேளை பாலகனை பாம்பு தீண்டியதை அடுத்து உடன் வைத்தியசாலைக்கு எடுத்துச செல்லும் வழியில் மரணம் சம்பவித்துள்ளது. கிளிநொச்சி உதயநகர் மேற்கைச் சேர்ந்த நடராசா யதுசன் (வயது-1) என்ற பாலகனே பாம்பு தீண்டி மரணமானவராவார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பே மேற்படி மரணமான பாலகனின் முதலாம் ஆண்டு பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## இலங்கையரின் கைவிரலடையாளம் பெறும் பிரிட்டனின் முடிவுக்கு இல. எதிர்க்கட்சிகள் கண்டனம்

### - நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

பிரிட்டனுக்கு செல்ல விரும்பும் இலங்கையர்கள் தமது கைவிரல் பதிவு அடையாளம் செய்யவேண்டும் என்ற பிரித்தானியாவின் முடிவுக்கு சிறிலங்காவின் எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் இதற்கு எதிராக நீதிமன்றில் வழக்கொன்றையும் தாக்கல் செய்துள்ளன.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த மங்கள சமரவீரவினால் தாக்கல்செய்யப்பட்ட இவ் வழக்கில் பிரித்தானியா அமுல் படுத்தியுள்ள இந்தப் புதிய நடைமுறை இலங்கையின் அரசமைப்பை மீறும் நடவடிக்கை என்பதோடு இதனைக் கடைப்பிடிப்பதன் ஊடாக இலங்கை மக்களை பாரிய குற்றவாளிகள் போல் மதிக்க முனைகிறது. பிரிதானிய அரசு எனத் தெரிவித்துள்ள அவர், இதனை அனுமதிப்பதன் மூலம் ஐக்கியதேசிய முன்னணி அரசு இந்த நாட்டின் சுயகௌரவத்தையும், சுயமரியாதையையும், அடகுவைத்துவிட்டது. இதனை உச்ச நீதிமன்றம் உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையுடன் அவர் தனது வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இதேநேரம் நேற்று பாராளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதனை ஆட்சேபித்து அரசுக்கு எதிராகக் கூச்சல் எழுப்பி இது தொடர்பாக ஆராய அனுமதி தருமாறு சபாநாயகரிடம் கோரியுள்ளனர். இதற்கு சபாநாயகர் மறுப்புத் தெரிவிக்கவே பாராளுமன்றம் சில மணிநேரம் ஒத்திவைக்கப்பட்டது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியில் இருவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஏ-9 நெடுஞ் சாலையில் மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியுடன் மோதுண்டதில் இரு ஓட்டிகளும் படுகாயமடைந்த நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.மேற்படி சம்பவம் நேற்று காலை 9.30 மணியளவில் கிளி. மத்திய விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## யூலை கலவர திகதியை தேசிய விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யூலைக்கலவரம்நடைபெற்ற 24 ஆம் திகதியைத் தேசிய விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தி அந்தத்தினத்தை இறந்தவர்களின் சிரார்த்த தினமாக அறிவிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இந்தக் கோரிக்கை அடங்கிய மனுவொன்றை யாழ். மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு யூலை போன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறக் கூடாது என அந்தக் கடிதத்தில் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

## வரிவிளம்பரம்

**N.E.C**

A-9 கிளிநொச்சி
A/L மாணவர்களுக்கான பொது ஆங்கில வகுப்புக்கள்.
15-08-2003 ஆரம்பம். ஆசிரியர் திரு.ரஜிவன் (Dip.in.ENG)(3613)

## அறிவித்தல்

தமிழ்: ஆசிரியர் வசீகரன் 09.08.2003 சனியன்று மு.ப. 11.00 மணிக்கு **G.A.Q.** 12.00 மணிக்கு **B.A.** விசுவமடு கிஸ்ணாவில் நடைபெறும் பி.ப.1.00 மணிக்கு **G.A.Q** 4 மணிக்கு **B.A.** அன்றே 3 மணிக்கு **A/L DAY** ஆகியன (பொன்னம்பலம் அருகில்) விஞ்ஞானக் கல்வி நிலையத்திலும் நடைபெறும்.

-ஆசிரியர் (3616)

## N.E.C. கணினிப்பயிற்சி நிலையம்

மத்தியகல்லூரி முன்பாக பாடசாலை மாணவர்களுக்கான பதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்.N.E.C கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 10% கழிவு உண்டு. காலம்:15-08-2003 நேரம்:3.00 மணி

(3614)

## மீண்டும் சீருடை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

தபால் ஊழியர்களின் சேவையை உச்ச மட்டத்தில் பேணுவதற்கும் அவர்களுக்குச் சீருடை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் அறிவித்துள்ளார்.

தனியார்களிடமிருந்து துவிச்சக்கர வண்டிகளும் தபால் விநியோகத்துக்காகக் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் பிரதேசத்தில் பணிக்கள்குளம் கிராமத்தில் கலைமகள் மன்பள்ளி விளையாட்டு விழா நடைபெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற இவ்விளையாட்டு விழா மாங்குளம் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்றதுடன் இறுதியின் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.(05)

# நெடுந்தீவில் திலீபன் மருத்துவமனை

# ஓராண்டு நிறைவு நிகழ்வு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இயங்கிவரும் தியாகதீபம் திலீபன் மருத்துவமனையின் ஓராண்டு நிறைவையொட்டி விசேட சிகிச்சைகளும் கலைநிகழ்வுகளும் விழையாட்டுப்போட்டிகளும் இடம்பெற்றுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை நெடுந்தீவு பிரதேசப் பொறுப்பாளர் கண்ணன் அவர்கள் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை தமிழீழ சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் தமிழ்வாணன் ஏற்றிவைத்தார். தியாகி லெப்.கேணல் திலீபனுக்குரிய ஈகச் சுடரினை வைத்தியக் கலாநிதி மயிலேறும் பெருமாள், தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் ஈழச் செல்வன் மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் தழல் நெடுந்தீவு திலீபன் மருத்துவமனை மருத்துவர் பூவேந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மலர்வணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வைத்தியசேவைகள் இடம்பெற்றன. DR.மயிலேறும் பெருமாள் அவர்களால் கண்பரிசோதனை செய்து இதில் 250 பேருக்குரிய கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 384 பொது மருத்துவச் சிகிச்சைகளும் 119 பற்சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. 69 இதயநோய் சிகிச்சைகளுக்கான ஆலோசனைகள் வழங்கப் பட்டன.

இச்சிகிச்சைகளை நோர்வேயில் இருந்து வருகை தந்திருந்த வைத்திய கலாநிதிகள் **DR.** சிவகணேசா, **DR.** நிமலநாதன் அவர்களும் மற்றும் வைத்திய கலாநிதிகளான **DR.** தவராஜா, **DR.**ஜீவானந்தன் மற்றும் போராளி வைத்தியர்களும் வழங்கியிருந்தனர்.

இவ்விழாவில் சிறப்பு நிகழ்வாக பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற பொது அறிவுப் போட்டியில் அதிக புள்ளி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், நெடுந்தீவு கிழக்கு மேற்கு அணிகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி ஈட்டிய அணியினருக்குமான பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.

# புதிய இனபாசிப்பயறு அறுவடை விழா

### - வைரஸ் நோயை எதிர்த்து வளரக்கூடியது

(அக்கராயன்)

வைரஸ் நோயை எதிர்த்து வளரக்கூடிய பாசிப்பயறு (ARI) அறுவடைவிழா கடந்த திங்கட்கிழமை அக்கராயன் மணியங்குளம் போதனாசிரியர் பிரிவில் சிறப்புற நடைபெற்றுள்ளது.

அப்பகுதி விவசாயப் போதனாசிரியர் க.கணேசலிங்கத்தின் அனுசரணையுடன் மணியங்குளத்தில் ம.புவனேந்திரனால் செய்கை பண்ணப்பட்ட மேற்படி இன பாசிப்பயறு வைரசை எதிர்த்து வளர்வதுடன் சிறந்த விளைச்சலையும் தரக்கூடியது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்போது நான்கு வகையான பயறு இணங்களைக் கொண்ட அனுசரணை ஆராய்ச்சி துண்டங்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உதவி விவசாயப் பணிப்பாளர், விவசாய உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், அப்பகுதி கிராம உத்தியோகத்தர், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேற்படி புதிய இனமான ஆரி என்ற பாசிப்பயறை பெற்றுக் கொள்ள விரும்பும் விவசாயிகளை அப்பகுதி போதனாசிரியருடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

### - தமிழ்மொழித்தினப் போட்டி -

# சிறுகதை ஆக்கத்தில் கிளி. மாணவிக்கு முதலிடம்

(அலுவலக செய்தியாளர்)

வட-கிழக்கு மாகாண அமைச்சினால் மாவட்ட ரீதியில் அண்மையில் நடாத்தப்பட்ட 2003 தமிழ்மொழித் தினப் போட்டியில் சிறுகதை ஆக்கத்திற்காக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார்.

கிளி.கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 10ம் ஆண்டு மாணவியான செல்வி. பசுபதிப்பிள்ளை நிருத்திகா என்ற மாணவியே "மாசற்ற புன்னகை" என்னும் சிறுகதை ஆக்கத்திற்காக வட கிழக்கு மாகாண மட்டத்தில் முதலாமிடத்தினை பெற்றுக் கொண்டார்.



கடந்த ஜுலை மாதம் 26ம் திகதியன்று யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்மொழித் தின விழாவில் வைத்து வட-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலர் இ. தியாகலிங்கத்தினால் மேற்படி மாணவிக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# இல.போக்குவரத்துச் சபையின் 1000 பஸ்வண்டிகள் கிடப்பில்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 1000 பஸ்வண்டிகளைச் சேவையில் ஈடுபடுத்த முடியாமல் இருப்பதாக சபையின் தலைவர் பாருக் தெரிவித்திருக்கிறார். இந்த நிலையில் அரசாங்கம் வழங்கியுள்ள ஆலோசனைகளை அமுல்படுத்த முடியாத நிலையில் தாம் உள்ளதாகக் கூறியுள்ள அவர், சேதமடைந்த நிலையில் முடங்கிக் கிடக்கும் ஆயிரம் பஸ்வண்டிகளை இவ்வாரம் தொடக்கம் சேவையில் ஈடுபடுத்துமாறு அரசாங்கம் ஆலோசனை வழங்கியிருந்தது.

அவற்றைத் திருத்துவற்குத் தேவையான உபகரணங்களைக கொள்வனவு செய்வதற்கு அமைச்சர் திலக் மாரப்பனவின் பெயரில திறைசேரி யிலிருந்து 10 கோடி ரூபா ஒதுக் கப்பட்டிருந்தது.

இதனைப் பயன்படுத்தி ரயர்களைக் கொள்வனவு செய்ய எண்ணியுள்ளோம்.

ஆனால் முனைய கடன்களைச் செலுத்தி முடியும்வரை புதிதாக ரயர்களை வழங்க முடியாது என்று தனியார் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

பஸ்வண்டிகளைத் திருத்தி அவற்றைச் சேவையில் ஈடுபடுத்துவதற்காகவே அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறது. ஆனால போக்குவரத்துச்சபை அதனைச் சரியாக பயன்படுத்தாது இருப்பது பற்றி மக்கள் ஆச்சரியப் படுகிறார்கள் உண்மையில் அதற்கு மேலும் 10 கோடி ரூபா தேவை என்று சபையின் தலைவர் கூறியிருக்கிறார்.

## புதுக்குடியிருப்பு ம/வி.பழைய மாணவர் சந்திப்பு

புதுக்குடியிருப்பு ம.வி பழைய மாணவர் சங்கம் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்துள்ள பழையமாணவர்களை எதிர்வரும் 16-08-2003 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு சந்திக்கவுள்ளது.

இந்நிகழ்வில்வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த பழைய மாணவர் குடும்ப சமேதாராகவும்இங்குள்ள பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை, பொன்விழாக்குழு என் பவற்றின் நிர்வாக உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரவும்.

பழைய மாணவர் சங்கம்
புதுக்குடியிருப்பு ம.வி.

(சி.7772)

## பளை.பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ - து)

## பணிநிலை வேண்டுகை (தற்காலிகம்)

**கீழ்க்காணும் பதவிக்கு தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01.பதவி: *தட்டெழுத்தாளர் 201:15*

02.சம்பள அளவுத்திட்டம்:2700.60X10.70X10.4000

04. தகைமைகள்: *க.பொ.த.தராதரப்பத்திரம் (சாதாரணம்)பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தட்டெழுத்தாளர் பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.*

03. வயதெல்லை: *18 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவர்கள்.*

குறிப்பு:- சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு 20-08-2003 அன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக "பொதுமுகாமையாளர் பளை.ப.தெ.வ.அ.கூ.சங்கம்-பளை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்
பளை.ப.தெ.வ.கூ.சங்கம்-பளை

(3611)

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 02 - 09 - 1942



மறைவு 19 - 07 - 2002

**திருமதி. சிவகுரு இராசம்மா**

திதி - 07.08.2003

***பேராலை, பளை***

அன்பின் இலக்கணமாய் அமைந்த எம் அன்னையே!
ஆண்டொன்று சென்றாலும் எம்மை விட்டு பிரியவில்லைத் தாயே!
கண்ணை இமைகாப்பது போல அல்லவா காத்தாய் அம்மா.
உங்களை ஒரு தடவையேனும் காண்போமா என ஏங்கித் தவிக்கின்றோம் அம்மா.

த.முகவரி: இல1D,
மல்லாவி, யோகபுரம்.

(3612)

குடும்பத்தினர்.

# இஸ்ரேல்-பலஸ்தீனப் பேச்சுக்கள் தேக்கம்; கைதிகள் விடுவிப்பில் தொடர்ந்து இழுபறி!

**இஸ்ரேல்-பலஸ்தீன சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தேக்கநிலையை அடைந்துள்ளது. இது குறித்து பலஸ்தீனப் பிரதமர் மகமூத் அபாஸ் நேற்று அறிவித்தார்.**

அமெரிக்கா தலைமையிலான சமாதானத் திட்டம் சிறிது சிறிதாக முன்னேற்றம் கண்டுவரும் நிலையில் இந்தப் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீனர்களின் விடுதலை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளே பேச்சுக்கள் தேக்க நிலைக்கான பிரதான காரணமாகும்.


பலஸ்தீனம் எதிர்பார்த்த அளவிற்கு பலஸ்தீனக் கைதிகள் விடுவிக்கப்படவில்லை எனக் கவலை தெரிவித்துள்ள அபாஸ் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்துவதாக அறிவித்தார்.

பலஸ்தீனத்தின் முக்கிய தீவிரவாத அமைப்புக்கள் கைதிகள் விடுதலை முற்றிலுமாக இடம்பெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளன. அதாவது சிறைகளிலுள்ள அனைத்துப் பலஸ்தீனர்களும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அமைப்புக்கள் உறுதியாகவுள்ளன. இது சாத்தியப்படாத பட்சத்தில் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் சாத்தியம் ஏற்படும் என எச்சரிக்கையும் செய்யப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய அரசு பலஸ்தீனத்தின் காஸா மற்றும் மேற்குக் கரையின் பெரும்பாலான பகுதிகளிலிருந்து முற்றாகத் தனது படைகளை வெளியேற்றிச் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளித்துள்ள நிலையில், பிரதமர் அபாஸின் அறிவிப்பு சமாதான முயற்சிகளைப் பெரிதும் பின்னடையச் செய்துவிடும் என்ற கவலையை அமெரிக்க அதிகாரிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

## நிலநடுக்கம்

குஜராத்தில் வடக்கே நேற்று முன்தினம் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது; றிக்டர் அளவு கோலில் 4 புள்ளி 9 ஆகப் பதிவாகியுள்ளது. சேதமேதும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. குஜராத் மாநிலத்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக் கத்தில் சுமார் 13000 பேர் உயிரிழந்ததுடன் ஏராளமான கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமானது தெரிந்ததே.



கனடாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயினால் எழும் புகை மண்டலத்தின் தோற்றம்

# ஐரோப்பிய நாடுகளில் வழக்கத்தைவிட இவ்வாண்டில் வெப்பம் அதிகரிப்பு

## -வெயில் கொடுமையால் மக்கள் அவதி

ஜேர்மனி,பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் வழக்கத்தைவிட இந்த ஆண்டு வெயில் சுட்டெரிப்பதால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் பொதுவாகவே ஆகஸ்ட் மாதத்தில் குறைந்தளவு வெப்பநிலை நிலவும். ஆனால் இதுவரை இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு வெப்பம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

பிரான்ஸில் வழக்கமாகக் கோடையில் 75 பாகை பரனைட்டாக இருக்கும் வெப்பநிலை இந்த வருடம் 98 பாகை பரனைட்டாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

சில இடங்களில் 106 பாகைக்கும் அதிமாகக் காணப்படுகின்றது.

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இதே நிலைதான் காணப்படுகின்றது. இங்கு வெப்பத்தின் காரணமாக ரயில் தண்டவாளத்தில் விரிசல் ஏற்பட்டு விடுமோ எனும் அச்சம் காரணமாகச் சில ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஜேர்மனி நாட்டு மக்களும் வெயிலின் கொடுமை காரணமாக, நீச்சல் குளங்கள், கடற்கரைகள் போன்ற நீர் நிலைகளை நாடிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

உயிரியல் பூங்காக்களிலும் வெயில் தாங்காமல் தவிக்கும் விலங்குகளின் மீது நீரை அள்ளித் தெளித்து குளிர்ச்சிப் படுத்துகின்றனர்.



ஜேர்மனியின் தென்பகுதியில் கனோவர் என்ற இடத்தில் வெப்பத்தைத் தணிக்க நீரில் இறங்கி விளையாடும் நான்கு வயது யனிக் என்ற சிறுவன்.

# குளிர்பானங்களால் ஆபத்து; நுகர்வோருக்கு எச்சரிக்கை!

(புதுடில்லி)

பிரபல பன்னாட்டு குளிர்பானங்களான கொக்கோ கோலா, பெப்சி உள்ளிட்ட வகைகளில் கடுமையான நச்சுப் படிவுகள் கலக்கப்பட்டுள்ளதாக டில்லியிலுள்ள அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் மையம் ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது.

அண்மையில் அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் மையம் கொக்கோ கோலா, பெப்சி, மிராண்டா,பன்டா உள்ளிட்ட 12 வகையான குளிர் பானங்களை ஆய்வுக்குட்படுத்தியே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதனைத் தயாரிக்கும் பிரபல நிறுவனங்கள் இந்தக் குளிர்பானங்களைத் தயாரிக்கப் பூச்சி கொல்லிகளையும் பயன்படுத்துவது சுகாதாரத்திற்கு ஏற்றதாக இல்லை எனும் திடுக்கிடும் தகவலை அண்மையில் அறிவியல் சுற்றுச் சூழல் ஆய்வு மைய இயக்குனர் திருமதி சுனிதா நாராயண் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் இத்தகைய குளிர் பானங்களில் நச்சுப் படிவுகள் இருப்பதால் புற்று நோய் ஏற்பட வாய்ப்பாகும் " என்று இக் குளிர்பானங்களை ஆய்வுக் குட்படுத்திய மருத்துவர்கள் உறுதியுடன் கூறியுள்ளார்கள்.

## தடைசெய்ய வலியுறுத்து

கொக்கோ கோலா, பெப்சி போன்ற குளிர்பானங்களால் ஆபத்து என வெளியான தகவலகளையடுத்து இவற்றைத் தடை செய்யுமாறு மக்களவையில் எதிர்க்கட்சிகள் நேற்று வலியுறுத்தியுள்ளன.

காங்கிரஸ்,இடதுசாரிக் கட்சிகள உறுப்பினர்கள் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்தனர். இதற்கு ஆளும் கட்சிக் கூட்டணியிலுள்ள சிவசேனவும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

# 'மிக்' போர் விமானங்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமிடுக!

## -அப்துல்கலாமிடம் வேண்டுகை

(புதுடில்லி)

'மிக்' ரகப் போர் விமானங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாவதால், அதில் பலியானவர்களின் குடும்பங்கள் மிக்ரகப் போர் விமானத்தின் தரத்தையும், பாதுகாப்பையும் அதிகரிக்குமாறு சனாதிபதி அப்துல் கலாமிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்திய விமானப் படையில் இடம்பிடித்துள்ள 'மிக்' விமானங்கள் அண்மைக் காலமாக அடிக்கடி விபத்துக் குள்ளாகி வருகின்றன.

இதனால் இந்த விமானங்கள் பறக்கும் சவப் பெட்டிகள் எனக் கூறப்படுகின்றன.

இந் நிலையில் மிக் விமானத்தில் பறந்து உயிரிழந்த விமானிகளின் குடும்பத்தினர் சனாதிபதி அப்துல் கலாமை நேற்று முன்தினம் டில்லியில் சந்தித்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளில் மிக்ரக விமானங்களில் பயணித்து உயிரிழந்த விமானிகளின் எண்ணிக்கை 170 என்பது குறிப்பிடத்தக்கது.

# மலேசியாவுக்கு ரஷ்ய போர் விமானங்கள்; ஒப்பந்தத்தில் கைச்சாத்திட புட்டின் பயணம்!

போர் விமானங்களை விற்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புட்டின் மலேசியா சென்றுள்ளார்.

போர் விமானத் தயாரிப்பில் பிரசித்தி பெற்ற ரஷ்யா, ஏற்கனவே மலேசியா நாட்டிற்குப் போர் விமானங்களைத் தயாரித்துக் கொடுத்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவில் தயாரிக்கப்படும் 18 சுகோய் ரகப் போர் விமானங்களை வாங்க மலேசிய அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி 18 சுகோய் ரகப் போர் விமானங்களை 2006 ஆம் ஆண்டுக்குள் ரஷ்யா, மலேசியாவுக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட மலேசியா சென்றுள்ள புட்டினை, மலேசியப் பிரதமர் மாதீர் மத்தூன், மலேசிய மன்னர் சுங்கு சலீம் ஆகியோர் வரவேற்றுள்ளனர்.



ஜகார்த்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட 33 மாடிகளைக் கொண்ட கட்டடத்தையே படத்தில் காண்கிறீர்கள்

# சுவிஸில் பணமோசடி வழக்கில் பெனாசிருக்கு 6 மாத சிறை

பணமோசடி வழக்கு ஒன்றில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவுக்கு 06 மாத சிறைத் தண்டனை விதித்து சுவிற்சர்லாந்து நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமராக பெனாசிர் பூட்டோ இருந்தபோது, சுவிற்சர்லாந்து நாட்டு வர்த்தக நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்திருந்தார்.

அதில் கோடிக்கணக்கான பணத்தை லஞ்சமாகப் பெற்றதாகப் பூட்டோ மீது சுவிற்சர்லாந்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த 05 ஆண்டுகளாக இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் திருமதி பூட்டோ, அவரது கணவர் ஆகிய இருவர் மீதும் 06 மாத சிறைத் தண்டனை விதித்துள்ளது. அத்துடன் இருவருக்கும் 25 இலட்சம் ரூபா அபராதமும் விதித்துள்ளது.

சுவிற்சர்லாந்தில் பெனாசிரின் வங்கிக் கணக்கை முடக்கியுள்ள நீதிமன்றம், அதில் சுமார் 10 கோடி ரூபாவை பாகிஸ்தான் அரசிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. திருமதி பூட்டோ தற்போது லண்டனில் வசித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முடக்கப்பட்ட சொத்துக்களை அபிவிருத்தி நிதியத்துக்கு மாற்றுக

## -ஐ.நா.வில் வேண்டுகை

ஈராக்கின் முன்னாள் அரசாங்கத்துக்குச் சொந்தமான முடக்கப்பட்ட அனைத்துச் சொத்துக் களையும் அபிவிருத்திக்காக நிறுவப்பட்ட நிதியத்துக்கு மாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டிருக்கின்றது.

ஈராக்கிய மத்திய வங்கியின் பதில் ஆளுநர் இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்கா தலைமையில் ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புக்குப் பின்னர் சமஷ்டி நிதியம் உருவாக்கப் பட்டது. இதற்குப் பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் கிடைத்தது. ஈராக்கை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான நிதியை வழங்குவது இந்த அமைப்பின் நோக்கமாகும்.


# எதிர்வரும் தேர்தலில் அயோத்தியின் பங்கு என்ன...?



இந்திய மக்களவையில் இன்று மையம் கொண்டுள்ள முக்கிய பிரச்சினை அயோத்தி தான். அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோயில் கட்டுவதா.... இல்லையா.... என்பதே. பிரச்சினைக்குரிய காரணமாகும். இதனால் மக்களவை விவாதக்களமாக மாறி விட்டது.

சங்கப் பரிவாரங்களை பாரதீய ஜனதா விஸ்வஹிந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ் அமைப்பு என்பன அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் விடயத்தில் கைகோர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றார்கள் போலுள்ளது. இது ஆச்சரியத்திற்குரியதொன்றும் அல்ல.

ஆனால் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளோ இவர்களுக்குப் பச்சைக் கொடி காட்ட மறுப்பதோடு வலுவான போர்க் கொடியைத் தூக்கி நிற்பதான நிலைமைகளே காணப்படுகின்றன. இதுவே மக்களவையில் மையம் கொண்டுள்ள குழப்பத்திற்குக் காரணமாகும்.







இதேபோல், இந்தியாவில் இராமர் கோயில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது? எனும் வினாவுடன் அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவது எனும் கொள்கையுடையோருக்கு ஆதரவாகக் கைதூக்கியுள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

மறுபுறம் அயோத்தியில் சிறிய சிறிய கோயில்களாக 100 இராமர் கோயில்கள் இருக்கும் போது, மற்றுமொரு இராமர் கோயில் எதற்கு? எதிர்க்கேள்வியுடன் தி.மு.க. தலைவர் கருணாநிதி அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில்



இராமர் கோயில் தேவை யில்லை என எதிர்வாதம் புரிகின்றார்.

இவற்றை உற்று நோக்கும் அவதானிகள், இத்தகைய வாத, பிரதிவாதங்கள் ஏன் எழுந்துள்ளதென்றால், விரைவில் வடமாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தல் அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதே. அதனால் தான் இதுவரை காலமும் உறங்க வைக்கப்பட்டிருந்த அயோத்தி விவகாரம், இன்றைய நிலையில் பசி கொண்ட வேங்கை போல் எழுந்து நிற்கின்றது என்று கூறுவதுடன், இந்தப் பிரச்சினை எங்கே..... எப்படி.... பூதாகரமாக மாறிப் பல பிரச்சினைகளைப் பக்கவிளைவுகளாக உருமாற்றி விடுமோ.... என்றும் அரசியல் அவதானிகள் அச்சம் வெளியிட்டுள்ளார்கள்.

கடந்த யூலை மாதம் 31 ஆம் திகதி ராம ஜென்ம பூமியில் இராமர் கோயில் கட்ட இயக்கம் அமைத்தவரான ராமச்சந்திர பரமஹம்சர் மரணமானதைத் தொடர்ந்தே அயோத்தி விவகாரம் மறுபடியும் சூடுபிடித்தது எனலாம்.

ஏனெனில், ராமச்சந்திர பரமஹம்சரின் இறுதிச் சடங்குக் கிரியைகளில் கலந்து கொண்ட பிரதமர், பரமஹம்சரின் கனவு நனவாகும். அயோத்தியில் ராமர் கோயில் நிச்சயமாகக் கட்டப்படும் எனச் சூளுரைத்தார் என்றும் துணைப்பிரதமர் அத்வானி, சர்ச்சைக்குரிய அயோத்தியில் இராமர் கோயில் மட்டுமே கட்டப்படும் என உறுதியுரைத்ததாகவும் ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டிருந்தன.

இதனையடுத்தே சர்ச்சைகள் உருவாகத் தொடங்கியது எனலாம்.

எதிர்க்கட்சிகள் மக்களவையில் பிரதமர் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் என வலியுறுத்தி, ஒத்திவைப்புத் தீர்மானமும், அவையில் வெளிநடப்பும் செய்தன.

அதுமட்டுமன்றித் தனிப்பட்ட எண்ணங்களை, கருத்துக்களை வாஜ்பாய் பொதுக் கருத்துப் போல் வலியுறுத்துவதாகவும் நீதிமன்றில் வழக்கு இருக்கும் போது அதைப் புறக்கணித்து வாஜ்பாய், அத்வானி கருத்து வெளியிடுவது ஜனநாயகத்திற்கு முரணானது என்றும் அவை குற்றம் சாட்டியுள்ளன.

மறுபுறம் 1949 டிசம்பர் 22 ஆம் திகதி நள்ளிரவில், இதே இராமச்சந்திர பரமஹம்சரின் தலைமையில்தான் அயோத்தியிலுள்ள பாபர் மசூதியின் பூட்டை உடைத்து இராமர்,

**அ. கலைவாணி**

லட்சுமணர், சீதை மூவரின் சிலைகளையும் வைத்தனர். ஆனால் அன்றைய பிரதமர் நேரு, உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல் ஆகியோர் இரவோடிரவாக மசூதிக்குள் இராமர் சிலை வைத்தது தகாதசெயலென அச்சிலைகளை அகற்றினர்.

எனவே இத்தகைய செயலைச் செய்த பரமஹம்சரின் கனவிற்காகவா... பிரதமர் நனவாக்கப் பாடுபடுகிறார்... என ஒரு சாராரிடையே அதிருப்தி நிலவுகின்றது.

மறுபுறம் அயோத்தி பாபர் மசூதி இடித்தவர்களைச் சட்டத்திற்கு முன்பு நிறுத்தித் தண்டனை வழங்கக் காங்கிரஸ் பாடுபடும் என்று காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி சூளுரைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேபோலவே தி.மு.க. தலைவர் கருணாநிதி தேசிய சனநாயக கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகிக் கொள்ள அயோத்தி விவகாரம் காரணமாக இருப்பதை தாம் விரும்பவில்லையென அறிக்கை வெளியிட்டு எச்சரித்துள்ளார் எனலாம்.

இத்தகைய நிலைமைகள் அனைத்தும் பிரதமர் வாஜ்பாயை திக்கு முக்காட வைத்துள்ளது போலுள்ளது.

அதனால் தான் பிரதமர் "நான் அயோத்தியில் கோயில் கட்டவேண்டும் என்று தான் கூறினேனே தவிர சர்ச்சைக்குரிய இடத்தில் கட்டவேண்டும் என்று கூறவில்லை" என கூறி பிரச்சினைகளிலிருந்து நழுவிக் கொள்ளப் பார்த்தார் எனலாம்.

அதேபோல் துணைப் பிரதமர் அத்வானியும், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அயோத்தி பிரச்சினையை மட்டும் தான் எந்த காலத்திலும் பெரிது படுத்துகின்றன. வாஜ்பாய் அரசை குறைகாண முடியவில்லை என்பதால், அயோத்தியை கிளறி பெரிது படுத்துகின்றன எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், இவையனைத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பது போல எதிர்க் கட்சிகள் ஒவ்வொன்றும் வாஜ்பாயை குறை கூறுவதில் முனைப்பாக நிற்கின்றன.

இதுவரை பிரதமர் வாஜ்பாய் 20 தடவைகள் அயோத்தி விவகாரம் பற்றி வீராவேசமாக அறிக்கைவிட்டு பின்னர் வாபஸ் பெற்றுள்ளார் என காங்கிரஸ் கேலிசெய்வது போலவும், அயோத்தி விவகாரத்தில் பிரதமர் ஒரு நிலையில் கருத்து கூறுவதேயில்லை தடுமாறுகின்றார் என மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் குறை கூறி நிற்கின்றன.

அதேநேரம் அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோயில் கட்டாது விட்டால் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்துப் போராடப் போவதாக விஸ்வஹிந்து பரிஷத் எச்சரித்துள்ளது.

இவையனைத்தும் பிரதமர் வாஜ்பாயை சிக்கலுக்குள் சிக்க வைத்துள்ளது என்பதுடன் ஆப்பிழுத்த நிலைக்கும் தள்ளிவிட்டது எனலாம்.

ஆனால், அவதானிகளின் கருத்து வேறாகவுள்ளது. தேர்தல் என்றவுடன் தான் அயோத்திப் பிரச்சினை பற்றி ஆளும் கட்சியும் சரி, எதிர்க் கட்சிகளும் சரி காரசாரமாக விவாதிக்கும். தேர்தல் முடிந்தவுடன் அயோத்திப் பிரச்சினையும் முடங்கிவிடும் என்கின்றனர்.

அத்துடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தற்போது அயோத்திப் பிரச்சினையில் காலூன்றியிருப்பதும் அரசியல் வியூகமேயன்றி வேறொன்றில்லை. அடுத்த பிரதமருக்கான இலக்கை நோக்கிய பயணத்தில் துறவிகளின் நன் மதிப்பைக் கவரவும், பெறவுமே இத்தகைய அயோத்தியை கையிலெடுதுள்ளார் என்றும் கருத்து நிலவுகின்றது.

விஸ்வஹிந்து பரிஷத், வாஜ்பாயை பிரதமராக்கியதாகவும், அத்வானியை துணைப் பிரதமர் ஆக்கியதாகவும் அவர்கள் கோயில் கட்ட உதவி செய்யாமல் பதவியில் அமர்ந்ததும் அயோத்தியையே மறந்து விட்டார்கள் என்று அடிக்கடி கோஷமிடுகின்றது.

அதனால் தான் ஜெயலலிதாவும் அயோத்தியை கையிலெடுத்துள்ளாரா... என்றும் கேள்வியெழுப்பப்படுகின்றது.

அதேநேரம் பாரதீய ஜனதாக் கட்சியுடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளாரா... என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனெனில் அரசியலில் யார் யாருடன் கூட்டுச் சேர்வார்கள், யார் யாரை எதிர்த்துக் கோஷமிடுவார்கள் என்பது புரியாத புதிர் தானே என்கின்றனர் ஒரு சாரார்.

எனவே இத்தகைய நிலை மைகள் இவ்வாறு இருக்கையில் பிரதமர் வாஜ்பாய் இவற்றை எப்படி எதிர்கொள்ளப் போகின்றார்... என்பதே இந்திய அரசியலில் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் விடயமாகும்.

அதுமட்டுமன்றி இராமர் கோயில் கட்டுமாறு தன்னை யாரும் நிர்ப்பந்தித்தால் பிரதமர் பதவியிலிருந்து விலகி விடத் தயார் என்றுவேறு பிரதமர் அறிவித்திருப்பதும் பரபரப்பை ஏற்படுத்துமென நாம் எதிர்பார்த்தாலும் இதுவும் அடிக்கடி நிகழும் சாதாரண சம்பவம் தானென்று அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர்.

எனவே பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி ஆகியோர் வடமாநில தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலுக்கு அயோத்தியை எவ்வாறு கையாள்வார்கள்...? காங்கிரஸ் சோனியா, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, தி.மு.க. கருணாநிதி ஆகியோர் அயோத்தி இழுபறியை எவ்வாறு தமக்கு அனுகூலமாக்கப் போகின்றார்கள்..? மொத்தத்தில் அயோத்திப் பிரச்சினை எதிர்காலத்தில் எப்படித்தான் கையாளப்படப் போகின்றது...?

# அரச திணைக்கள அதிகாரிகள் மீதான முறைப்பாடுகள் குடாநாட்டில் அதிகரிப்பு

## - மனித உரிமை ஆணைக்குழு தகவல்

யாழ்மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு அண்மைக் காலமாக யாழ். மாவட்டத்தில் அரச திணைக்களங்களின் அதிகாரிகள் தொடர்பான முறைப்பாடுகளே அதிகம் கிடைக்கப் பெறுவதாக இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உட்பட பல உயர் மட்ட அதிகாரிகள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் அதிகம் செய்யப்பட்டுள்ளன.

சம்பளம், பதவி உயர்வு, மேன்முறையீடு, துன்புறுத்தல் உட்படப் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறிலங்காவில் முதலிட ஐரோப்பியருக்கு வேண்டுகை

(கொழும்பு)

சிறிலங்காவில் முதலீடு செய்யுமாறு ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் பிலிப் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுற்றுலாத்துறையைப் பலப்படுத்தும் நோக்கில் இந்த முதலீடுகள் அமைய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

சிறிலங்காப் பிரதமரின் அழைப்பை ஏற்று கொழும்பிற்கு வந்துள்ள பிலிப் அரசதரப்பினரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

# இரசாயன பொருள் பயன்பாட்டால் கற்பிட்டியில் குடிநீர் பெருமளவில் மாசடைவு!

**கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் குடிநீர் அசுத்தமடைந்து வருவதாகவும், இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் இன்னும் 10 வருடங்களில் இப்பகுதி மக்கள் பல்வேறு நோய்களுக்கு உள்ளாவார்கள் எனவும் மாவட்டச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.ஏ.ஆர். ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.**

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திக்குழுவின் தலைவரும், அமைச்சருமான ஏ.எச்.எம்.அஸ்வர் தலைமையில் புத்தளம் கச்சேரியில் இக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

அவர் அங்கு மேலும் கூறுகையில்:- பாலாவி முதல் கற்பிட்டி வரையான பகுதிகளில் விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைக்கு இரசாயனப் பொருட்களையும், கிருமிநாசினிகளையும், பசளைகளையும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இதனால் சுற்றாடல் பாதிக்கப்படும், காலப் போக்கில் இந்தத் தண்ணீரில் இரசாயனப் பொருட்கள் கலந்துவிடும் வாய்ப்புள்ளது. ஒரு காலத்தில் கல்பிட்டி மக்கள் இப்பகுதியைக் கைவிட்டு இடம் பெயர்ந்து வாழக் கூடிய நிலையும் ஏற்படும். குறிப்பாகக் குழந்தைகள், சிறுவர் கள் இந்த நீரை அருந்துவதால் எதிர்காலத்தில் அவர்கள் பாதிக் கப்படலாம் என அவர் மேலும் கூறி யுள்ளார்.

# வீதியால் செல்வோரைக் கடித்த நாயின் உரிமையாளருக்குத் தண்டனை

(கொழும்பு)

வீட்டு நாயைச் சரியான முறையில் கட்டி வளர்க்காமல் வீதியால் செல்வோரைக் கடித்ததால் நாயின் உரிமையாளருக்கு குளியாப்பிட்டிய நீதவான் 1000 ரூபா அபராதமும், 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 3 மாத சிறைத் தண்டனையும் வழங்கியுள்ளார்.

தன்மீது பிரதிவாதியின் நாய் கடித்ததாக ஒருவர் தாக்கல் செய்திருந்த வழக்கை விசாரணை செய்த பின்னர் நீதவான் மேற்படி தீர்ப்பை வழங்கியதுடன், நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டும் எனவும் பிரதிவாதியை எச்சரித்துள்ளார்.

இந்த நாய் பலருக்கு கடித்ததாகவும், தனக்கு நாய் கடித்து வைத்திய சிகிச்சைக்காக அதிக செலவு செய்ததாகவும் வழக்காளி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மென்டிஸ் கொலை தொடர்பாக பாதாள உலகக்குழு உறுப்பினர் கைது

மேல்மாகாண சபை உறுப்பினர் மென்டிஸைக் கொலை செய்த குற்றச் சாட்டின் பேரில் பாதாளக்குழு உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் ஒன்றரை மாதமாக தலைமறைவாகியிருந்தார்.

கடந்த மூன்றாம் திகதி காரில் சென்று கொண்டிருந்த இவர், வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிசார் தடுக்க முற்படுகையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முயன்றுள்ளார். எனினும் பொலிசார் இவரை மடக்கிப் பிடித்துள்ளனர். இவரிடமிருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றும், ரவைகள் ஒன்பதும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிசார் கூறுகின்றனர். இவருடன் சென்ற மேலும் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

# அரசு, புலிகளுக்கிடையிலான பேச்சுக்கு ஒத்துழைப்பு வழங்க பிரான்ஸ் தயார்

## - வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்க பிரான்ஸ் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

பேச்சுவார்த்தையை பிரான்சில் நடத்த சிறிலங்கா அரசாங்கமோ தமிழீழ விடுதலைப்புலிகளோ பிரான்ஸ் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவில்லையென பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அரசு-புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்க பிரான்ஸ் தயாராய் உள்ளது. அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கு தேவையான வசதிகளை வழங்க முடியும். இதற்கு பிரான்ஸ் அரசாங்கம் எதுவித மறுப்பும் தெரிவிக்காது என நான் நம்புகின்றேன் என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் ரணிலுடன் வர்த்தகக்குழு செல்லும்

(கொழும்பு)

வரும் சனிக்கிழமை சீனா செல்லும் பிரதமர் ரணில்விக்கிரம சிங்கவுடன் வர்த்தகக்குழு ஒன்றும் செல்லவுள்ளது.

வரும் 11ஆம் திகதி சீன வர்த்தகத்துறை முதலீட்டுத் துறையின் தொழிலதிபர்கள் மற்றும் பிரமுகர்களுடன் பிரதமர் ரணில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

டோக்கியோ மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து சீனத்தரப்பிற்கு விளக்கம் அளிப்பதற்கும் சிறிலங்காவின் வர்த்தகக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

# அமைச்சரின் பாதுகாவலர் பயிற்சியின்போது மரணம்

(கொழும்பு)

அமைச்சர் ஒருவருக்கு மெய்க்காப்பாளராக பணியாற்றிவரும் சிறிலங்காப் பொலிசார் ஒருவர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

மெய்க்காப்பாளர்கள் பிஸ்டல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை திடீரென நிலத்தில் வீழ்ந்து இவர் மரணமடைந்துள்ளார்.

# புதிய பாடநூல்களைப் பெற விண்ணப்பிக்க வேண்டுகை

2004 ஆம் ஆண்டு 6 ஆம் தரத்திற்கு முற்றிலும் புதிய பாடநூல்கள் அச்சிடப்படுவதால் பாடசாலைகள் தங்கள் மாணவர் தொகைக்கேற்ப முழுமையாக விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல அடுத்த வருடம் 9 ஆம் தரத்திற்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடநூலும் முழுமையாக மாற்றமடைகிறது. ஒவ்வொரு புத்தகமும் குறைந்தது மூன்று வருடங்கள் பாவிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதால் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அதிபர்களை அறிவுறுத்தியுள்ளது.

இனிவரும் காலங்களில் முதலாம், இரண்டாம் தரமாணவர்களுக்கு மட்டுமே முழுமையான புத்தகங்கள் வழங்கப்படும். ஏனைய தரங்களுக்குக் குறைந்தளவு புத்தகங்களே விநியோகிக்கப்படவுள்ளது. எனவே பழைய புத்தகங்களை மீளப் பெற்று விநியோகிக்க ஒழுங்கு செய்யுமாறும் அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# அரச ஊழியர் சுயவிருப்பில் ஓய்வுபெற புதிய திட்டம் அரசாங்கத்தால் அறிமுகம்!

அரச சேவையில் மேலதிக ஊழியர்களைக் குறைப்பதற்கான சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் திட்டத்தை அரசு அறிமுகம் செய்யவுள்ளது.

இவ்வாறு சுயவிருப்பில் ஓய்வு பெறும் அரச ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கான சுற்று நிருபமொன்று சகல அமைச்சுக்களுக்கும், நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள், அதிகார சபைகள் என்பவற்றிற்கு திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்தையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்கள் மேலதிக ஊழியர்களின் விபரங்களை அனுப்பி வைக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் சுயவிருப்பின் பேரில் ஓய்வூதித் திட்டம் அமுல் செய்யப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அரச சேவையில் பல்லாயிரக்கணக்கானோர் மேலதிகமாக இருப்பதால் அரசு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலில் இந்த சுயவிருப்ப ஓய்வூதியத் திட்டம் விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து அதிகார சபை, கட்டடப் பொருட்கள், கூட்டுத்தாபனம், தபால் திணைக்களம், சுகாதார சேவை ஆகியவற்றில் அறிமுகப்படுத்தப் படவுள்ளதாகவும் திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# செவ்வாய்க் கிரகத்தை 27இல் பார்க்க முடியும்

செவ்வாய்க் கிரகத்தை இம்மாதம் 27ஆம் திகதி வானில் பார்க்க முடியும் என அமெரிக்காவின் வாஷிங்டன் நகர வானியல் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

வானியல் வரலாற்றில் எப்போதாவது ஒரு முறைதான் கிரகங்கள் பூமிக்கு அருகில் காட்சியளிப்பதாகக் கூறப்படுகின்றது.

அந்த வகையில் ஏறத்தாழ 60,000 ஆண்டுகளுக்குப் பின்னர் செவ்வாய்க்கிரகம் மிக நெருக்கமாக நகர்ந்து வரவுள்ளதாகவும், இதைத் தொலை நோக்கியின் மூலமாக அனைவரும் காண முடியும் எனவும் அவ்வானியல் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி மதியம் 3.30 மணிக்கு விண்ணில் மிகப் பிரகாசமாக செவ்வாய்க் கிரகத்தைக் காண முடியும். பார்ப்பதற்கு சிவப்பு நிறத்தில் சந்திரனின் அரை வட்டவடிவில் காணப்படும் செவ்வாய்க் கிரகம் இம்மாதம் 27ஆம் திகதிக்குப் பின்னர் அடுத்த 2287ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28ஆம் திகதி மீண்டும் பூமிக்கு மிக நெருக்கமாக வரவாய்ப்புள்ளதாக இந்திய வானியல் விஞ்ஞானி சுதாகர் பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

# பிரிட்டன் செல்லும் இலங்கையர் கைரேகை பதிவுக்கு உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

பிரிட்டனுக்கு பயணம் செய்யும் இலங்கையரின் கைரேகைகளை பதிவு செய்வதற்கு பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு அமைச்சரவை ஒத்துழைப்பு வழங்கியுள்ளதை எதிர்த்து அடிப்படை உரிமைமீறல் மனுவொன்று உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொ.ஐ.முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் மங்களசமரவீரவும், அவரது இணைப்புச் செயலாளரும் இம் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள். வெளிவிவகார அமைச்சர் டிரோன் பர்னாண்டோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் உட்பட 34பேர் பிரதிவாதிகளாக இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரிட்டனுக்கு பயணம் செய்யும் இலங்கையரின் வலது ஆள்காட்டி விரல் ரேகைகளை பதிவு செய்வதற்கு பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயம் கடந்த ஜூலை 23ஆம் திகதி முதல் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 4 இலட்சம் அபராதம் விதிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் கடந்த ஜூன் மாதம் வரையிலான ஆறுமாத காலப் பகுதியில் கசிப்பு உற்பத்தி, விற்பனை, கசிப்பு வைத்திருந்தமை, அனுமதிப் பத்திரமின்றி சாராயம், கள் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்கு 4 இலட்சத்து 22 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்தினர் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் மேற்கொண்ட திடீர் சோதனைகளின் போது சிக்கிக் கொண்ட 120 பேருக்கு எதிராக சாவகச்சேரி, பருத்தித்துறை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகளிடமிருந்து இந்த அபராதம் அறவிடப்பட்டதாக பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி பு. ரகுநாதன் தெரிவித்தார்.

# பழ.நெடுமாறன் உள்ளிட்ட ஐவர் மீது குற்றச்சாட்டு பதிதல் ஒத்திவைப்பு

(சென்னை)

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் உள்ளிட்ட 05 பேர் மீது குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்வது எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குற்றப் பத்திரிகையைத் தமிழில் வழங்க வேண்டுமென்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் கோரியதையடுத்து நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதாக கூறி, பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் மற்றும் நிர்வாகிகள் பாவாணன், சுபவீரபாண்டியன், தாயப்பன், சாகுல் ஹமீத் ஆகியோர் கடந்த ஓராண்டு காலமாக சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது நேற்று குற்றச்சாட்டுக்கள் பதியப்படுவதாக இருந்தது.

இதையொட்டி நெடுமாறன் உள்ளிட்ட குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் அனைவரும் பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணை தொடங்கியதும் குற்றம் சாட்டப்பட்டுள்ள பாவாணன், தமக்கு குற்றப் பத்திரிகை நகல் தமிழில் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். மேலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக் கறிஞர்கள் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகவில்லை.இதனையடுத்து விசாரணையை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு நீதிபதி ராஜேந்திரன் ஒத்திவைத்துள்ளார். அன்றையதினம் பழ.நெடுமாறன் உள்ளிட்டவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்படும் என்றும் நீதிபதி அறிவித்துள்ளார்.

### -'சற்' புள்ளித் திட்டத்தினால் -

# பாதிக்கப்பட்ட மாணவர்களை பல்கலைக்கு உடன் அனுமதிக்க நீதிமன்றம் உத்தரவு

**பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை 'சந்'புள்ளி அடிப்படையில் அனுமதிப்பதால் தமக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று கூறி மருத்துவ பீடத்திற்குத் தகுதியான 16 மாணவர்கள் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல்மனுவைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் அம்மாணவர்களை உடனடியாக அனுமதிக்குமாறு பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டுள்ளது.**

அத்துடன் இம்மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படாத காலத்திற்கு நட்ட ஈடாககலா 20 ஆயிரம் ரூபாவை வழங்குமபடியும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த 16 மாணவர்களும் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் பல்கலைக்கழக மருத்துவ பீட அனுமதிக்கான புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்திருந்தனர்.

ஆனால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய 'சற்'புள்ளி அனுமதி முறையினால் இவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை.

இதனை ஆட்சேபித்து இம் மாணவர்கள் தமது பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் விபரங்களுடன் உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதம நீதிபதி சரத் என்-சில்வா மற்றும் நீதிபதிகள் சிராணி, பண்டார நாயக்க, ரி. எதிரிசூரிய ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

## அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

தமது கடமைமீது அதிகம் கவனம் செலுத்தாதசமுர்த்தி உத்தியோகத்தர்கள் அப்பதவிகளிலிருந்து நீக்கப்படுவார்கள் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார்.

இவ் உத்தியோகத்தர்கள் அனைவரும் தமது பணிகளை அர்ப்பணிப்புடன் செய்யவேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

## யாழ்.இல் 495 பாடசாலைகளில் 64 பாடசாலைகள் இயங்கவில்லை

### -உயர்பாதுகாப்பு வலயமே காரணம் -

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 495 பாடசாலைகளில் 64 பாடசாலைகள் இயங்காதுள்ளன. இவை அனைத்தும் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் இருப்பதாக மனிதநேய அமைப்பொன்றின் புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.

இயங்கிக் கொண்டிருக்கும் 431 பாடசாலைகளில் கால்ப்பங்குப்பாடசாலைகள் சேதமடைந்துள்ளதோடு ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறைகள் காணப்படுகிறது.

இவ்வாறான பிரச்சினைகளே யாழ். குடாநாட்டில் க.பொ.த. சாதாரணதர பரீட்சார்த்திகள் கடந்தமுறை குறைவானபரீட்சைமுடிவுகளைப் பெற்றுக்கொள்ளக்காரணமாக அமைந்துள்ளது என்றும் அப்புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

### - பொலிஸ் அதிகாரி தாக்குதல் விவகாரம் -

## அமைச்சரின் மருமகனை சட்டவிரோதமாக விடுவிக்க முயற்சி

கறுவாக்காட்டுப் பொலிஸ் நிலைய அதி காரி மீது தாக்குதல் நடத்தியதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை சட்டவிரோதமான விடுதலை முயற்சியில் பொலிஸ் அதி காரி ஒருவர் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

மேற்படி சந்தேக நபர் அமைச்சர் ஒருவரின் மருமகனாவார். இவரை பொலிஸ் நிலையத்தில் விளக்க மறியலில் வைக்காது, அவரை வேறொரு இடத்தில் தங்க வைக்குமாறு அவ் அதிகாரி பொலிசாரைப் பணித்துள்ளார். அத்துடன் அவர் பொலிஸ் அதிகாரியைத் தாக்கியதாக குற்றம் சுமத்தாது, மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கையில் நிரந்தர சமாதானம்; அவுஸ்திரேலியா இதில் தெளிவாகவுள்ளது

### -தூதரக அதிகாரி கருத்து

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் வட-கிழக்கில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வு வர வேண்டும் என்பதிலும் அவுஸ்திரேலியா தெளிவாக இருப்பதாக அவுஸ்திரேலிய தூதுவராலய அரசியல் செயலாளர் பில்நன்க வேஸ் கூறியுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் பாகுபாடின்றி உதவ அவுஸ்திரேலிய அரசு ஆயத்தமாகவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

காத்தான்குடி சமாதான செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் கூறியுள்ளார். இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்தினால் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அவுஸ்திரேலியா நன்கு அறியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் காத்தான்குடி சமாதான செயலக இணைப்பாளர் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கைதடிச் சந்தியில் புதிய காவலரண் போக்குவரவுக்கு பெரும் இடையூறு

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சந்தியின் நடுவே கடந்த சில நாட்களாக சிறிலங்காப் படையினர் புதிய காவலரன் ஒன்றை அமைத்துள்ளதுடன் அதில் காவல் கடமையிலும் ஈடுபட்டும் வருகின்றனர்.

கண்டி வீதியுடன் கோப்பாய்க்குச் செல் லும் வீதியை இணைக்கும் சந்தியில் மண் மூடைகள், மரக்குற்றிகள், முட்கம்பிகள் கொண்டு சிறிலங்காப் படையினரால் அமைக்கப்பட்ட இக் காவலரணால் போக்குவரவுக்குப் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் செம்மணியில் இருந்து நாவற்குழி வரையிலான கண்டி வீதியின் இருமருங்கிலுமுள்ள கட்டடம் மற்றும் பற்றைகளுக்குள் படைச்சிப்பாய்கள் இருவர் இருவராக இணைந்து காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். 50 மீற்றருக்கு இருவராக நிற்கும் இவர்கள் இரவுவேளைகளில்அப்பாதை யூடாகச் செல்வோரை மறித்து அடையாள அட்டையையும் சோதித்து வரு கின்றனர். (33)

## முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு வழங்கல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி அகதிகள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினரால் பளைப் பிரதேசத்தில் 20 முன்பள்ளிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இவற்றில் 12 முன்பள்ளிகளைச் சேர்ந்த 217 சிறார்களுக்கு உலக தரிசன நிறுவனம் போசாக்குச் சத்துணவினை வழங்கிவருவதாகவும், அதேபோன்று மற்றும் 8 முன்பள்ளிகளைச் சேர்ந்த 108 சிறார்களுக்கு யாழ்.கியூடெக் நிறுவனம் போசாக்கு சத்துணவினை வழங்க வருவதாகவும் பச்சிலைப்பள்ளி பளை அகதிகள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் த.புலேந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் உலகதரிசன நிதியுதவியுடனும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உருத்திரபுரம் சிவநகர் முன்பள்ளிகளான செந்தூரன், செந்தமிழ், செந்தமிழினி முன்பள்ளிச் சிறார்களுக்கான போசாக்கு உணவு வழங்கல் ஆரம்ப நிகழ்வு 04-08-2003 அன்று சிறப்பான முறையில் இடம் பெற்றுள்ளது. (சோ)

## புலிகளின் அலுவலகம் மீது வீசப்பட்ட குண்டின் சிதறல்கள் இரசாயன பகுப்பாய்வுக்கு!

### -சந்தேக நபர்களைக் கைது செய்யவும் உத்தரவு

(லண்டன்)

வவுனியாவில் விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் குண்டுத்தாக்குதலில் சேகரிக்கப்பட்ட தடயங்களை இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுவதற்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட குண்டின் பாகங்கள் மற்றும் மண்ணின் மாதிரி என்பவற்றை வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி விஜயரட்ன நேற்று முன்தினம் நீதிமன்றில் சமர்ப்பித்த போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதிபதி பொறுப்பதிகாரி விஜயரட்னவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## பொது அமைப்புகளுக்கான முக்கிய கலந்துரையாடல்

(உடையார்கட்டு)

உடையார்கட்டுப் பொது அமைப்புகளிற்கான முக்கிய கலந்துரையாடல் அண்மையில் உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் உடையார்கட்டுத் தெற்கு தே.எ. பேரவைச் செயலர் த.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இங்கு புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தையும், அவை சீராகச் செயற்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திக் கருத்துரை வழங்க, உடையார் கட்டுக் காவல்பணிமனைப் பொறுப்பாளர், பெற்றார் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் போது வீதியில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைத் தெளிவுபடுத்தி அனுப்புமாறும், மக்கள் காவல்துறையினருடன் ஒத்துழைக்க வேண்டிய தேவையையும் முன்வைத்துக் கருத்துரை வழங்கினார். தொடராகக் கருத்துரையை உடையார்கட்டு வடக்குக் கிராம அலுவலர் செல்வவிநாயகம், புதுக்குடியிருப்பு நகர் வலயப் பொறுப்பாளர் இரத்தினம் என்போர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் உடையார்கட்டு வலயத்துக்குப் புதிய அரசியல்துறைப் பொறுப்பாளரும் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்.

## தாய்லாந்துப் பிரதமர் 14ம் திகதி சிறிலங்காவுக்கு விஜயம்

தாய்லாந்தின் பிரதமர் வரும் 14ம்திகதி சிறிலங்காவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக கொழும்புத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.பிரதமர், சனாதிபதி மற்றும் பௌத்தமதத் தலைவர்களையும் தாய்லாந்துப் பிரதமர் சந்தித்துப் பேசவுள்ளார். கடந்த 'மே' மாதம் இவர் சிறிலங்காவிற்கு விஜயம் செய்ய இருந்த போதிலும் அந்தப் பயணம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.


## 6ஆம் ஆண்டு நினைவில்

மலர்வு 01 - 11 - 1974



உதிர்வு 07 - 08 - 1997

தலைமைக் காவலர்

**உதயச்சந்திரன**

தமிழீழ காவல்துறை

(கந்தசாமி உதயச்சந்திரன்)

களபூமி,பாலாவோடை,காரைநகர்

ஆண்டுகள் ஆறு ஆகிவிட்டதண்ணா! எம்துயரம்
ஆறுபோல் பெருகிறதண்ணா-நீ
நினைந்நது நடக்குமண்ணா-நீ
நிம்மதியாய் உறங்கு அண்ணா.

உற்றார் உலரோ உயிர்கொண்டு போம் பொழுது
குற்றாலத்துறை கூத்நனல்லால் நமக்குற்றார் ஆருளரோ?.

விமலானந்தன ஜவர்னா,
தேராவில், விசுவமடு.

(3474)



## சிந்தனைக்கு

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 07-08-2003

## எதை வழங்கப் போகின்றார்கள்?

"வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை வழங்கினால், அது தனி நாடு உருவாவதற்கு வழி வகுக்கும்" என்பது இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான இனவாத சக்திகளின் கூச்சலாகும். இத்தகைய கூச்சலில் லக்ஷ்மன் கதிர்காமரும் பங்கு கொண்டுள்ளமை அவரின் விசுவாசத்தை வெளிப்படுத்தி நிற்கும் செயல்.

தமிழர் தாயகத்திற்காகப் போராடிவரும் விடுதலைப்புலிகள் இயக்கம் இனப் பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்து வைக்கும் நோக்கில் பேச்சுவார்த்தைகளை நடத்துகின்ற அதேவேளை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த இறுதித் தீர்வுவரை காத்திருக்க முடியாது என்பதனால் இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கோருகின்றது.

இவ் இடைக்கால நிர்வாகமே தனி நாடு உருவாவதற்கு வழி வகுத்துவிடும் எனப் பேரினவாத சக்திகளும், எதிர்க்கட்சிகளும் கூக்குரல் இடுகின்றன. ஆனால், இது யதார்த்தத்திற்கு மாறானதாகும். ஏனெனில், இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கோரியதன் மூலம் விடுதலைப்புலிகள் விட்டுக்கொடுப்பைச் செய்துள்ளனர் என்பதே உண்மையாகும்.

இடைக்கால நிர்வாகம் என்பது, புதிய அரசு ஒன்றை உருவாக்கு வதற்கான வழி முறையல்ல. இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வொன்று எட்டப்படும் வரையில், மேற்கொள்ளப்படும் ஒரு இடைக்கால அமைப்பே ஆகும். இந்நிலையில் இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப் பெற்றால் தமிழீழம் ஒன்று உருவாகிவிடும் எனக் கூறுவது மடமைத்தனமான பேச்சாகும்.

உண்மையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை விடுதலைப்புலிகள் கோரியிருப்பதானது அவர்கள் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் மார்க்கத்தில் நடைமுறைச் சாத்தியமானதொருதிட்டத்தை முன்வைத்துள்ளனர் என்றே கொள்ளத்தக்கதாகும். ஆனால், இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளுக்கு வழங்குவது தனி நாட்டிற்கு வழி வகுத்து விடும் எனக் கூறி அதை நிராகரிப்பின் விடுதலைப்புலிகளுக்கு வழங்கப் போவது எதை? தனி நாட்டையா?

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் படிப்படியாக வளர்ச்சி கண்டு வந்த நிலையில் இராணுவரீதியில் ஒடுக்க சிறிலங்கா அரசாங்கங்கள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்விகண்ட நிலையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இச்சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் எனச் சர்வதேச சமூகம் கொடுத்த அழுத்தமும் காரணமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகச் சிறிலங்கா அரசாங்கமோ பெரும்கையறு நிலையில் இருந்தது. விடுதலைப்புலிகளின் இராணுவ ரீதியிலான அழுத்தத்திற்கு முகம் கொடுக்க முடியாது சர்வதேச நாடுகளிடம் இருந்து இராணுவ உதவிகளைக் கூடக் கோரும் அளவிற்கு அதன்நிலை இருந்தது.

ஆயினும், யுத்த நிறுத்தமும், சமாதானப் பேச்சுவார்த்தைகளும் ஆரம்பிக்கப்பட்டமையானது, தனியரசு ஒன்று உருவாக்குவதற்கான போராட்டத்தில் ஒரு தேக்க நிலையை உருவாக்கியது எனலாம். இந்நிலையிலேயே தனி அரசிற்கான அடிப்படைக் கட்டுமானங்களில் அக்கறையுடன் செயற்பட்ட விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாகக் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்.

இந்நிலையில், இடைக்கால நிர்வாகம் தனி நாடு உருவாவதற்கு வழிவகுக்கும் எனக் கூறுவது, அரசியல் நிகழ்வுகளுக்கு நேர் எதிர்மாறானதாகும். அதாவது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று வழங்கப்படாது போனால் அது தனிநாடு ஒன்று உருவாவது தடுக்க முடியாது போகலாம் என்ற யதார்த்தத்திற்கு எதிர்மாறானதாகும். ஏனெனில் இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாகாது போனாலே தனி அரசு ஒன்று விரைவில் உருவாவதற்கு வாய்ப்பானதாக அமையும்.

சிறிலங்கா ஆட்சியாளர்களும் சரி, அதற்கு எதிரானவர்களும் சரி, இடைக்கால நிர்வாகம் ஒன்றை வழங்குவதை இழுத்தடிப்பதோஅன்றி குழப்பத்திற்கு உள்ளாக்குவதோ எதுவாகிலும் சரி, அதனால் நன்மை அடையப் போவதில்லை. ஏனெனில், இடைக்கால நிர்வாகம் உருவாகாது போதல் என்பது தனி நாட்டிற்கான வாய்ப்பை அதிகளவில் உயர்த்துவதாகவே இருக்கும். அதாவது இடைக்கால நிர்வாகத்திற்குப் பதில் தனியரசு வழங்குவதாகிவிடும். இதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கூட உருவாகலாம்.

# 12அரச நிறுவனங்களில் அதிக ஊழல் மோசடி; இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிக்கை

(கொழும்பு)

கூடுதலான அளவில் ஊழல்களும், மோசடிகளும் இடம் பெறுவதாகத் தெரிவித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பட்டியலிட்டுள்ள 12 நிறுவனங்களில் நீதவான் நீதிமன்றங்களும், பொலிஸ் திணைக்களமும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பில் ஆராய்ந்திருக்கும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களென 12 இடங்களை பட்டியலிட்டிருக்கின்றது.

வனஇலாகா திணைக்களமும், பொலிஸ் திணைக்களம், மோட்டார் வாகனப்பதிவு ஆணையாளர் அலுவலகம், சுங்கத்திணைக்களம் நீதவான் நீதிமன்றங்கள் குடிவரவு குடியகல்வுத்திணைக் களம், உணவுத்திணைக்களம், மத்திய போக்குவரத்துச்சபை, பிரதேச செயலகங்கள், நகர அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச பொறியியலாளர் அலுவலகம், நில அளவையாளர் நாயகத்திணைக்களம் ஆகிய நிறுவனங்களே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல்கள் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரம சூரிய தெரிவித்திருக்கிறார்.

2001ஆம் ஆண்டில் இலஞ்ச ஊழல்கள் தொடர்பில் 45 தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

111முறைப்பாடுகள் பரிசீலனைக் குட்படுத்தப்பட்ட பின்னர் 60 பேர் இது தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் 2001ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமாதான முயற்சிக்கு கரி பூசுபவர்கள் எத்தகைய தீர்வை விரும்புகிறார்கள்

## -அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கேள்வி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்குக் கரிபூசமுற்படுபவர்கள் எத்தகைய தீர்வினை தாம் முன்வைக்க விரும்புகின்றார்கள் என்பதைத் தெரிவிக்கவேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் கூறியுள்ளார்.

தேசிய வீடமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் தம்புத்தே கட்ரன் கெத்கமவில் நிர்மாணிக்கப்பட்ட 15 ஆவது மாதிரிக் கிராம திறப்பு விழாவின் போது உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். நிரந்தரமான சமாதானம் ஏற்படவேண்டியதன் அவசியம் உணரப்பட்டிருக்கின்றது. இந்தச் சமாதான முயற்சி முன்னெடுக்கப்பட்டால்தான் நாட்டில் பொருளாதாரமும், அபிவிருத்தியும், சுபீட்சமும் ஏற்படமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தற்காலிக தேவைக்கேற்ற வகையில் சுங்கத்திணைக்களம் நவீனமாக வேண்டும்

## கூட்டுத்தொழிற்சங்க முன்னணி வேண்டுகை

(கொழும்பு)

சுங்கத்திணைக்களம் தற்கால தேவைக்கேற்றவாறு நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என சுங்கப்பகுதி கூட்டுத்தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

ஆயினும் இந்நடவடிக்கை அரசியல் மயப்படுத்தக்கூடாதென இச்சங்கம் அறிவித்துள்ளது. அதிகார சபைகளாக மாற்றப்பட்டுள்ள சகல நிறுவனங்களும் முற்றும் முழுதாக அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன இதனால் ஏற்பட்ட மோசடி ஊழல் நடவடிக்கை காரணமாக இந்நிறுவனங்களை மூடுவதற்கு அல்லது தனியார் மயப்படுத்துவதற்கான நிலை ஏற்பட்டுள்ளது என முன்னணி மேலும் கூறியுள்ளது.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் சுங்கப்பகுதி கூட்டுத் தொழிற்சங்க முன்னணியின் தலைவர் நேற்று முன்தினம் பேசுகையில் இறைவரித் திணைக்களத்தையும், கலால் திணைக்களத்தையும் இணைத்து அதிகார சபை ஒன்றை உருவாக்குவதன் மூலம் அரசு தனது பொறுப்பை கைகழுவி விட முயற்சி செய்கிறது எனக் கூறியுள்ளார்.

## -அம்பாறை மாவட்டத்தின்-

# சிங்களப் பகுதி அபிவிருத்திக்கு ஹக்கீம் ரூ.9 மில்லியன் உதவி

அம்பாறை மாவட்டத்தில் சிங்களப்பிரதேசங்களில் அவசர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென கிழக்கு அபிவிருத்தி அமைச்சிலிருந்து 9 மில்லியன் ரூபாவை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சர் ரவூப்ஹக்கீம் பணிப்புரை வழங்கியுள்ளார். ஏழு பிரதேச சபைகளின் தலைவர்களும் அமைச்சரை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

# முழுத்திறமையையும்வெளிப்படுத்துவோம்

## இந்திய அணித்தலைவர் தெரிவிப்பு

"அவுஸ்திரேலியா, நியூசிலாந்திற்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் முழுத்திறமையையும் வெளிப்படுத்துவோம்" என இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி நம்பிக்கைதெரி வித்துள்ளார்.

வெளிநாட்டு வீரர்களை இந்திய அணியின் இளம் வீரர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்வார்கள் என்றும் கூறியுள்ளார்.

வருகின்ற அக்டோபர் மாதம் நியூசிலாந்து அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றது.

இதைத்தொடர்ந்து நவம்பர் மாதம் இந்திய அணி அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு எதிரான போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

இதனையொட்டி புதிய அணி வீரர்கள் தேர்வு தொடர்பாக டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய கங்குலி இதில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின்போது, வீரர்கள் தவறான வார்த்தைகளைப் பிரயோகிப்பது அதிகரித்துள்ளது என்று சுனில் கவாஸ்கர் அண்மையில் தெரிவித்ததை மறுக்க முடியாது என்று கூறியதுடன்,

ஆனால் இந்திய வீரர்கள், வெளிநாட்டு வீரர்களின் அனைத்து நடவடிக்கைகளையும் திறமையுடன் சமாளிப்பார்கள் என்று நம்பிக்கையும் தெரிவித்துள்ளார்.



# முதல் டெஸ்ட் போட்டி அகமதாபாத்திற்கு மாற்றம்

இந்தியா நியூசிலாந்து அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள இரண்டு டெஸ்ட், ஐந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில், முதல் டெஸ்ட் போட்டி அக்டோபர் 08 ஆம் திகதி தொடங்கவுள்ளது.




இந்த டெஸ்ட் போட்டி உத்தரப் பிரதேச கான்பூரில் நடைபெறுவதாக இருந்த போதும் தற்போது அகமதாபாத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகஇந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. உத்தரப் பிரதேசத்தில் கடுமையாக பெய்து வரும் மழை காரணமாக, கான்பூர் ஆடுகளம் பரிசோதிக்கப்பட்ட போது, விளையாட முடியாத நிலை காணப்பட்டதையடுத்து டெஸ்ட் போட்டி அகமதாபாத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் கூறியுள்ளார்.

# ஆலோசனை பெற லண்டன் பயணம்

இந்திய வேகப் பந்து வீச்சாளர் சிறிநாத் முழங்காலில் ஏற்பட்டுள்ள காயம் குறித்து மருத்துவ ஆலோசனை பெற 2 நாட்களில் இங்கிலாந்து செல்லவுள்ளதாகக் கூறியுள்ளார்.

முற்றிலும் குணமான பின்னரே போட்டிகளில் விளையாடவுள்ளதாகக் கூறியுள்ள சிறிநாத், நியூசிலாந்துக்கு எதிரான போட்டிகளில் பங்கேற்பதா? வேண்டாமா? என்பது குறித்து இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் அறிவிக்கவுள்ளதாகக் கூறியுள்ளார்.

# கொக்கஹோலா, பெப்சி விற்பனை இந்.பாராளுமன்ற உணவகத்தில் தடை

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்ற உணவகத்தில் கொக்கஹோலா, பெப்சி நிறுவன பானங்களை விற்க அனுமதிப்பதில்லை என்று இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.

கொக்கஹோலா, பெப்சி உட்பட பன்னிரெண்டு பிரபல நிறுவனங்களின் குளிர்பான மாதிரிகளில் ஆபத்தான அளவுக்கு உயர்ந்தளவில் பூச்சி கொல்லிமருந்துகள் இருப்பதாக சுற்றுப்புறச் சுழல் நிறுவனம் ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டிருந்தது.

கொக்கஹோலா மற்றும் பெப்சி நிறுவனங்கள் அந்த அறிக்கை தவறானது என்று கூறியுள்ளன.

அமெரிக்கா, ஐரோப்பாவில் உள்ளது போன்ற கடுமையான தரக்கட்டுப்பாட்டு முறையைத்தான் தாங்கள் இந்தியாவிலும் கடைப்பிடிப்பதாக அந்த இரு நிறுவனங்களும் கூறியுள்ளன.

உணவு பதனிடும் அமைச்சகம் இந்த குளிர்பான வகைகள் பற்றி விரிவான அறிக்கை வழங்கும்படி கேட்டிருப்பதாக இந்திய உளநலத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# உடுத்துறையில் நேற்று பொது மண்டபம் திறந்துவைப்பு

யாழ். வடமராட்சிக் கிழக்கு உடுத்துறை பொது மண்டபத் திறப்பு விழா நிகழ்வு நேற்று பி.ப.3.00மணியளவில் உடுத்துறை கிராம அலுவலர் வ. தவராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை வடமராட்சி கிழக்கு புனர் அமைப்புக் குழுத்தலைவர் சி. பொன்னம்பலம் அவர்களும் வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஐ. சிவஞானம் அவர்களும் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறை மக்கள் தொடர்பாளர் யாழ்மன்னன் அவர்கள் ஏற்றி வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து மண்டபத்தின் பெயர்ப் பலகையினை ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் செல்வி ஈழவாணி அவர்கள் திரைநீக்கம் செய்துவைக்க தொடர்ந்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை அவர்கள் நாடாவினை வெட்டி மண்டபத்தினை திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தலைமை உரையும், சிறப்புரைகளை வத்திராயன் கிராம அலுவலர் .க.ம ஜோசப் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறை மக்கள் தொடர்பாளர் யாழ்மன்னன், வடமராட்சி கிழக்கு புனர் அமைப்புக்குழுத் தலைவர் .சி பொன்னம்பலம் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப வேலாயுதம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர். நன்றி உரையினை வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத் தின்செயலாளர் சீ. செபரட்ணம் நிகழ்த்தினார்.

## கண்காணிப்பு...

கட்டுப் பாட்டில் அமைக்கப்பட்டதால் அது அகற்றப்பட வேண்டும் என சிறிலங்காப் படையினர் கூறிவருவதுடன் அதனை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் ஏற்றுள்ளது. ஆனால் இப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளடங்குவதகவும் பல ஆண்டுகளாகஅதே இடத்தில் இருந்து வந்திருப்பதாகவும் விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகக் கூறியிருந்தனர். இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இந்த முகாமை அகற்றுவது தொடர்பாக நல்ல முடிவெடுத்து அதனை நமக்கு அறிவிக்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கூறியதுடன் அதற்கான காலக்கெடுவையும் நேற்றுவரை வழங்கியிருந்தது.

இந்நிலையில் இது தொடர்பான பேச்சுக்கு இடமில்லை எனவும் அந்த முகாமை அகற்ற மாட்டோம் எனவும் விடுதலைப்புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

## 17 காசோலை...

தொடர்பாக நேற்று யாழ் நீதிமன்றத்தில் நடந்த விளக்கத்தின் போது யாழ். நீதவான் விக்னராசா இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். எதிர்வரும் 10 ஆம் மாதம் 01ஆம் திகதிக்கிடையில் இக்கா சோலை கள் முற்றுமுழுதாக ஒப்படைக்க வேண்டும் எனவும் கட்டளையிட்டுள்ளார்.இதேவேளை இவ்விசாரணைக்காக அரச குற்றவியல் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி தர்மராசாவும் நீதிமன்றில் சமுக மளித்திருந்தார். (27,33)

## வடக்கு ...

வாழ்வுக் கழகத்தினால் நிர்மாணிக்கப்படவுள்ள இடைத்தங்கல் முகாமுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தொடர்ந்து கூறும்போது, ஏற்கனவே கிளிநொச்சி, திருமலை மாவட்டங்களில் இடைத்தங்கல் முகாம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்று நிர்மாணப்பணிகளும் நடைபெற்று வருகின்றன என்றார்.

## சமாதான...

மக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடிவிட்டு இங்கே சமாதானம் நிலவுவதாகக் கூறும் கருத்துக்களும், நிதியைச் செலவழிக்கும் இத்தகைய செயற்பாடுகளும் தவிர வேறு எந்த பயன்தரு நடவடிக்கைகளும் இதுவரை நடைபெறவில்லை.

இங்கு வருபவர் எவரும் சமாதானத்தின் பின்பும் மக்கள் மீளக்குடியேற முடியாது தம் வாழ்உரிமைகள் பறிக்கப்பட்டு இராணுவத்தின் கெடுபிடிகள், நெருக்கு வாரங்கள் என்பனவற்றின் மத்தியில் வாழும் மக்களிடம் சென்று கேட்டுத் தெரிவதில்லை. இதனால் இப்படியான தென்னிலங்கைக் குழுக்களின் வரவை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். சமாதானம் பற்றிய போதனைகள் எம்மினத்தினை அடக்கியாளும் அரசியல் சக்திகளுக்கே தேவைப்படும் என்று நாம் நம்புகின்றோம். ஏனெனில் தமிழ் மக்களுக்கு என்று முன்வைக்கப்படும் எந்த ஒரு தீர்வையும் தென்னிலங்கையின் சிங்கள மக்களோ இனவாத அரசியல் கட்சிகளோ இதுவரை ஏற்றதாக வரலாறில்லை. கடந்த காலத்தில் தமிழரின் புனர்வாழ்வுக்காக அமைக்கப்பட்ட சிரான் என்ற அமைப்பைத் தூக்கி எறியும் சதித்திட்டத்தில் தென்னிலங்கைச் சக்திகள் ஈடுபட்டதன் மூலம் இவர்களின் உண்மையான சமாதானத்தின் மீதுள்ள மனநிலையைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான புலிகள் இருக்கும் வரை தமிழர்களுக்கு சமாதானத்தின் நிலையை விளக்குவதற்கு தென்னிலங்கைச் சக்திகளின் தேவைப்பாடு இருக்காது என்பதில் தமிழ் மக்கள் உறுதியாகவுள்ளார்கள்.

தமிழர்களின் பிரச்சினைக்கு இடைக்கால நிர்வாகத் தீர்வு வழங்குவது சட்டச்சிக்கலை ஏற்படுத்தும் என்றால் சட்ட ரீதியாகச் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரச்சினைகள், தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்பான பிரச்சினைகள் இன்னமும் ஏன் நடைமுறைப்படுத்தவில்லை. உங்களுக்கு அதிகாரம் இருந்தால் தென்னிலங்கையில் சுட்டிக்காட்டி இருக்கலாம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## இலங்கையரின்...

இதேவேளை, இச்சட்டம் தொடர்பாக சிவில் அமைப்புக்களும் கவலை தெரிவித்துள்ளதுடன் உலகில் 172 நாடுகள் இருக்கும் போது பிரித்தானியா இலங்கையைமட்டும் எப்படி தெரிவுசெய்தது. என மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

## கண்டெடுப்பு

முல்லைத்தீவு, சிலாவத்தைப் பகுதியில் மலர், மல்லாகம் எனப் பெயரிடப்பட்ட கடிதஉறையுடன் சிறுபிள்ளைக்கான மோதிரம் ஒன்றும், தேசிய அடையாள அட்டைகான 04 புகைப்படமும் சிலாவத்தை முள்ளியவளை வீதியில் கண்டெடுக்கப்பட்டு சிலாவத்தைச் சந்தியில் உள்ள அன்னம் பல்பொருள் வாணிபத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு மேற்படி கடையின் உரிமையாளர் கேட்டுக்கொள்கின்றார். (20)

## ஏ-9வீதியில்...

அ.திருமுருகன் (வயது28) இரத்தினபுரம், கிளிநொச்சியை சேர்ந்த பொன்னுத்துரை (வயது55) ஆகிய இருவருமே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களாவர்

இவர்களில் படுகாயமடைந்த பொன்னுத்துரை என்பவர் மேலதிக சிகிச்சையின் பொருட்டு கிளி.மாவட்ட வைத்தியசாலைஅம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

கிளிநொக்கி தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

## பொற்பதி..

தித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முகாம் அமைக்கும் பணி தொடர்பாக விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சர்வதேச கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுடன பேச்சுக்கள் நடத்தியுள்ளார். (27)

### 05 ஆம் ஆண்டு மாணவர்களின்

# கல்வி நிலையை அதிகரிக்க தொடரும் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்விகற்கும் 05 ஆம் ஆண்டு மாணவர்களின் கல்விநிலையை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இம்முறை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் கல்விநிலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நிலையை அடுத்து வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிமனையினரால் மேற்படி மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவது பற்றிய கருத்தரங்கு இவ்வலயத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஆறாவது அமர்வில் நெடுங்கேணி மகாவித்தியாலயம், குளவிசுட்டான் அதக பாடசாலை, மாறா இலுப்பை அ.த.க பாடசாலை, ஒலுமடு அ.த.க பாடசாலை, பட்டிக்குடியிருப்பு அ.த.க பாடசாலை சின்னபூவரசங்குளம் அ.த.க பாடசாலை, பெரியமடு அ.த.க பாடசாலை, வேலனகுளம்அ.த.க பாடசாலை, மதியாமடு விவேகானந்த வித்தி யாலயம் ஆகிய ஒன்பது பாட சாலை களைச் சேர்ந்த பாடசாலை அதிபர் கள் ஆசிரியர்கள், பெற்றோர் கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (லோ)

### - போக்குவரத்துத் துறையின் -

# ஆறு தொழிற்சங்கங்கள் இன்று எதிர்ப்பு ஊர்வலம்

(கொழும்பு)

போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த ஆறு முக்கிய தொழிற் சங்கங்கள் அமைப்புக்கள் கூட்டாக எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்த இருக்கின்றன. இந்த ஊர்வலம்இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொத்தணி பஸ் நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவது, ஊழியர்களின் சலுகைகளைக் குறைப்பது, அநீதியான இடமாற்றங்கள் பதவியுயர்வுகள் என்பனவற்றுக்கு ஆட்சேபனை தெரிவிப்பது என்று இலங்கை போக்குவரத்துச்சபை கூட்டுத்தொழிற்சங்க முன்னணியின் தலைவர் சோமவீர சந்திர சிறி தெரிவித்திருக்கின்றார்.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் அவசர கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முல்லை, துணுக்காய் கல்வி வலயங்களின் அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அவசர கலந்துரையாடலில் அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் தமது கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் தவறாது சமுகம் தருமாறு முல்லைத்தீவு மாவட்ட கல்வி வலயங்களின் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

இதுவரை தீவிரமாக செயற்பட்டு வரும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களின் இணைந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் சங்கத்துடன் இன்று முதல் முல்லைத்தீவு மாவட்ட முல்லை, துணுக்காய் கல்வி வலயங்களின் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கமும் இணைந்து தீவிரமாக செயற்படும் என்பதை உத்தியோகபூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் சங்கத் தலைவர் கூறியுள்ளார்.

### – ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய –

# ஆசிரியர் ஐவருக்கு இடமாற்றம்; வகுப்புக்களை மாணவர் புறக்கணிப்பு

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் ஐந்து ஆசிரியர்களின் இடமாற்றத்தால் வகுப்புக்களை மாணவர்கள் புறக்கணிப்புச் செய்தனர்.கடந்த 30ஆம் திகதி தொடக்கம் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் ஐந்து ஆசிரியர்கள் இடமாற்றம் குறித்த தகவலையடுத்து மாணவர்கள் வகுப்புக்களை புறக்கணித்ததுடன் பரீட்சைகளையும் புறக்கணித்துள்ளனர்.

இது சம்பந்தமாக நேற்று இடம்பெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்க பொதுக்கூட்டத்தைத் தொடர்ந்து தற்காலிகமாக மாணவர்கள் புறக்கணிப்பை நிறுத்தியுள்ளனர்.

மேலும் இவ் ஆசிரியர்களுக்கு நேற்று மாற்றக் கடிதம் கிடைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இரண்டாம் தவணைப் பரீட்சைக்கான நேர அட்டவணையும் உரிய நேரத்தில் கிடைக்கவில்லை என்றும் தெரியவருகிறது. (05)




01-08-2003 தொடக்கம் 08-08-2003 வரை
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க கொடிவாரம்
ஊனம் கண்டதை மறந்து, உலகில் செயலாற்ற ஒன்று திரள்வோம்
(Karod)
(சி-8451)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.